# இயக்க வரலாறு சொல்லும் நூலகம்!



அண்ணன்
முரசொலி செல்வம்
மறைந்துவிட்டார்
என்ற செய்தியை
என்னால்
நம்பமுடியவில்லை

நோயில்லை
நொடியில்லை;
விபத்தில்லை
விபரீதமில்லை;
படுத்தார்; எழவில்லை

கலைஞருக்குப் பிறகு
இயக்க வரலாறு சொல்லும்
நூலகமாய் இருந்தார் அவர்

புள்ளி விவரங்களை
விரல் நுனியில்
அள்ளி வைத்திருந்த
அறிவாளி அவர்

சிலந்தி என்ற பெயரில்
அவர் முரசொலியில்
எழுதிவந்த

அரசியல் கட்டுரைகள்
கலைஞரின்
கைவண்ணமோ என்று
கலைவண்ணம் காட்டின

அவரை இழந்து வாடும்
சகோதரி செல்வியைத்
தேற்ற முயன்று
தோற்றுப் போனேன்

"நான்
சாய்ந்துகொள்ளும்
கடைசித் தோளை
இழந்துவிட்டேன்"

என்று
முதலமைச்சர் வடித்த
கண்ணீரை
ஆயிரம் விரல்கள்கொண்டு
துடைக்க வேண்டும்

குடும்பத்தார்க்கும்
நண்பர்களுக்கும்
என் ஆழ்ந்த இரங்கல்

மரணத்தால்
எலும்பு சதையைப்
பறிக்க முடியும்;
எண்ணங்களை அல்ல

முரசொலி உள்ளவரை
செல்வம் இருப்பார்



- கவிப்பேரரசு
வைரமுத்து

தலைவர் கலைஞர் இல்லை என்ற குறையை எனக்கு இன்றைக்கும் போக்கிக் கொண்டிருப்பவர்!

# என்னை உருவாக்கிய கர்த்தாக்களுள் ஒருவர் முரசொலி செல்வம்!

## 'முரசொலி – சில நினைவலைகள்' நூல் வெளியீட்டு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



'முரசொலி சில நினைவலைகள்' என்ற தொடர் கட்டுரை 100 நாட்களாக முரசொலியில் வெளியானது.

நம்முடைய மரியாதைக்குரிய; நான் எப்போதும் அண்ணன் என்று அழைக்கும் முரசொலி செல்வம் அவர்களை, 'எங்களை உருவாக்கியவர்' என்று இங்கே பலரும் சொன்னார்கள். என்னை உருவாக்கிய காரணகர்த்தாக்களுள் அவரும் ஒருவர். என் மீது அக்கறை எடுத்துக் கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்; இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறார். அவரே மறந்தாலும், தொலைபேசியில் அவரை தொடர்பு கொண்டு இன்று பேசியது எப்படி இருந்தது என்று கேட்டு தெரிந்து கொள்வேன். அவரும் என்னுடைய பேச்சை தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் பார்த்துவிட்டு தொடர்புகொண்டு ஊக்குவிப்பார்.

**நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் நம்முடைய தலைவர் அவர்கள் இல்லை என்ற குறையை எனக்கு இன்றைக்குப் போக்கிக் கொண்டு இருப்பவர் முரசொலி செல்வம் அவர்கள்தான்.**

தொடர் கட்டுரையாக அது வெளிவந்தாலும், படித்தவர்களுக்குத் தெரியும், அது ஒரு நாவலைப் போல சுவையாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் தனித்திறமை அது!

முரசொலியின் தொடக்க காலத்தில் நானும் எனது சகோதரர்களும் எப்படியெல்லாம் பணியாற்றினோம் என்பதை அண்ணன் செல்வம் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

முரசொலி என்பது தாளாக மட்டும் இல்லாமல் வாளாகவும் இன்றைக்கு நம்முடைய கைகளில் இருக்கிறது. அவரால் வெளியிடப்பட்டுள்ள இந்தப் புத்தகம் அதற்குச் சாட்சியாக இருக்கிறது.

"கழகத்தவர்க்கு இது பொக்கிஷம். மூத்தவர்களுக்கு இது பழைய நாட்குறிப்பு. இளைஞர்களுக்கு எதிர்கால வழிகாட்டி. பத்திரிகைத் துறை நண்பர்களுக்கு இது பாடப்புத்தகம். புலனாய்வு பத்திரிக்கையாளர்களுக்கு இது ரகசியங்களின் தொகுப்பு. மொத்தமாய் சொல்ல வேண்டுமானால் கலைஞர் அவர்களின் 'இன்னொரு நெஞ்சுக்கு நீதி'! '" - என்று பெருமையோடு நான் எழுதி இருக்கிறேன்.

ஜெயலலிதாவின் ஆட்சியில் 1992-ஆம் ஆண்டு முரசொலி செல்வம் அவர்கள் சட்டமன்றத்தில் கூண்டில் ஏற்றப்பட்டார்கள். சட்டமன்ற வரலாற்றில் முன்னும் பின்னும் எடுத்துக்காட்டு இல்லை என்கிற அளவுக்கு பேரவைக்குள் கூண்டு வைக்கப்பட்டு அதில் செல்வம் அவர்கள் ஏற்றப்பட்டார்கள். 'கூண்டு கண்டேன், குதூகலம் கொண்டேன்' என்று 'முரசொலி'யில் கலைஞர் எழுதினார்கள்.

கலைஞர் அவர்கள் பாணியில் சொல்ல வேண்டுமானால், "இந்தப் புத்தகம் கண்டேன், குதூகலம் கொண்டேன்" என்றுதான் நான் சொல்ல வேண்டும். அத்தகைய மகிழ்ச்சியை நீங்களும் பெற வேண்டுமானால் இந்தப் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள்.

இன்றைய இளைஞர்கள், அதிலும் குறிப்பாக, கழகத்தை நோக்கி ஈர்க்கப்படும் இளைஞர்கள் நிறைய படிக்க வேண்டும். நமது கடந்த கால வரலாறுகளை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இயக்கம் எத்தகைய சோதனைகளை, வேதனைகளைச் சந்தித்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

நமக்கு முன்னால் தியாகம் செய்த தீரர்களின் முகங்களை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதனால்தான் புத்தகங்களை பரிசாகக் கொடுங்கள் என்பதை ஒரு இயக்கமாக மாற்றி இருக்கிறேன்.

மீண்டும் ஒரு முறை முரசொலி செல்வம் அவர்களுக்குப் பாராட்டுகளை, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

# செல்வத்துள் செல்வம்!



சட்டமன்றக் கூண்டில் முரசொலி ஆசிரியர் செல்வம்!

அரசியல் சட்டத்தின் 356வது பிரிவின் இரண்டாம் பகுதியான otherwise என்பதைப் பயன்படுத்தி, ஆளுநரின் ஒப்புதல் கையெழுத்து இல்லாமலேயே ஒரு மாநில ஆட்சியைக் கலைத்து ஜனநாயகப் படுகொலை நிகழ்ந்தது என்றால் அது 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான். கலைக்கப்பட்டது, தமிழ்நாட்டில் இருந்த தி.மு.க. ஆட்சி. கலைக்கச் சொன்னவர் ஜெயலலிதா. கலைத்தவர் பிரதமர் சந்திரசேகர். இருட்டிய பிறகு அறிவிப்பு வெளியானது.

ஆட்சிக்கலைப்பு அறிவிப்பைக் காலையிலிருந்தே எதிர்பார்த்திருந்த கலைஞர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கழக நிர்வாகிகளுடன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார். முரசொலி மாறன் எம்.பி. டெல்லியிலிருந்து அங்குள்ள சூழல்களை விவரித்துக் கொண்டிருக்கிறார். இரவு 10.30 மணி.

முரசொலி அலுவலகத்தின் ஆசிரியர் குழு, செய்தியை எந்த முறையில் வெளியிடுவது, என்ன தலைப்பு வைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், பிரிமியர் பத்மினி கார் வருகிறது. அதில் வந்தவர், ஆசிரியர் முரசொலி செல்வம்.

அடுத்த சில நிமிடங்களில், செய்தி அதற்கான தலைப்பு முதன்மைச் செய்தியை ஒட்டிய பெட்டிச் செய்திகள் என அனைத்தையும் விறுவிறுவென எழுதி முடித்து, எதை எந்தப் பக்கத்தில் போட வேண்டும் என்றும் விளக்கிவிட்டுப் புறப்படுகிறார். 'ஜனநாயகப் படுகொலை' என்பதுதான் தலைப்பு.



- கோவி. லெனின்
மூத்த பத்திரிகையாளர்

கலைஞர் அங்கே இருந்திருந்தால், முரசொலி மாறனும் வந்திருந்தால் என்ன தலைப்பு வைப்பார்களோ, எப்படி செய்தியைக் கொடுப்பார்களோ அதனை அவர்கள் இல்லாத சூழலிலும் அப்படியே பிரதிபலிக்கக் கூடியவர்தான் முரசொலி செல்வம். எத்தகைய நெருக்கடியான நேரத்திலும் அமைதியான அணுகுமுறையுடன் ஆழமான சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடியவர்.

ராஜீவ்காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட 1991 மே 22 அன்று நள்ளிரவில், அரசியல் காழ்ப்புணர்வுடன் முரசொலி அலுவலகம் தாக்கப்பட்டு, தீ வைத்து எரிக்கப்படுகிறது. வாகனங்கள், ஆவணங்கள், அச்சுக் காகிதங்கள், அச்சகம் எல்லாம் எரிந்து கருகிய நிலையில், மறுநாளே முரசொலி நாளிதழ் அச்சிடப்பட்டு வாசகர்களின் கைகளில் சேர்ந்தது. அப்போது முரசொலி செல்வம் வைத்த தலைப்பு Murasoli will take it. இரண்டாம் உலகப் போரில் லண்டன் நகரின் மீது ஹிட்லரின் நாஜிப் படைகள் குண்டு வீசி நிலைகுலைய வைத்தபோது, மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையுடன் London will take it என்று இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் சொன்ன வார்த்தைகள் அவை. முரசொலியும் மறுநாளே மீண்டெழுந்தது.

ஜெயலலிதா ஆட்சியில் முரசொலி மீதான உரிமை மீறல் பிரச்சினையால் சபாநாயகர் உத்தரவின்படி சட்டமன்றத்தில் ஆஜரானார் முரசொலி செல்வம். அவரை விசாரிப்பதற்காகவே சட்டமன்றத்தில் ஒரு கூண்டு வைக்கப்பட்டது. அவர் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், துணிந்து வாதாடி, அடக்குமுறைக் கூண்டைத் தகர்த்து கருத்துரிமை சிறகை விரித்தார். முரசொலி செல்வத்தின் துணிச்சலைப் பாராட்டி, 'கூண்டு கண்டேன் குதூகலம் கொண்டேன்' என்ற தலைப்பில் உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதினார் கலைஞர்.

கலைஞரின் அக்கா மகன், முரசொலி மாறனின் தம்பி, கலைஞர் மகள் செல்வியின் கணவர் என்ற குடும்ப உறவின் பின்னணியையும் தாண்டி கழகத்தின் அறிவார்ந்த சொத்தாகத் திகழ்ந்தவர் முரசொலி செல்வம். 80 ஆண்டுகளைக் கடந்த முரசொலி தனது பயணத்தில் எதிர்கொண்ட நெருக்கடிகளை, தாக்குதல்களை, கைது நடவடிக்கைகளை தொகுத்து 'முரசொலி சில நினைவுகள்' என எழுதினார். இதழியல் துறையில் துணிவுடன் செயல்பட ஆர்வமுள்ளவர்களுக்கு அது மிகச் சிறந்த கையேடு.

சிலந்தி என்ற பெயரில் முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். கலைஞரின் எழுத்தில் பொதிந்திருக்கும் எள்ளல் நடையை உரிமையுடன் பெற்றுக்கொண்டு, தன் பாணியிலான கட்டுரைகளை வழங்கியவர் அவர். அக்டோபர் 8ஆம் தேதியன்று ஆளுநர் ஆர்.என். ரவியை நையாண்டியால் நையப் புடைத்து கட்டுரை எழுதியிருந்தார். இன்று அடுத்த கட்டுரைக்கான குறிப்புகளை எடுத்து வைத்துவிட்டு, சற்று ஓய்வெடுத்தவர் நிரந்தர ஓய்வுக்குள்ளாகி விட்டார்.

82 வயதிலும் கொள்கை உறுதிமிக்க பத்திரிகையாளராக செயல்பட்டதுடன், சமூக வலைதளங்களில் இளையவர்கள் வெளிப்படுத்தும் கருத்துகளையும் உற்று கவனித்து, அவற்றை முரசொலியில் வெளியிடச் செய்து ஊக்கப்படுத்தியவர். 50 ஆண்டுகால அரசியல் நிகழ்வுகள் குறித்த சந்தேகங்கள் எதுவாக இருந்தாலும் உடனடியாகத் தெளிவுபடுத்தக் கூடியவர். தேர்தல் களத்தைத் துல்லியமாக உணர்ந்து, முடிவுகளை முன்கூட்டியே கணிக்கக்கூடியவர். சாதகபாதகங்களை மீறி கழகத்தின் கொள்கைப் பயணம் தொடர்ந்திட உரிய ஆலோசனைகள் வழங்கி தலைமைக்கும் இயக்கத்திற்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.

இத்தனை ஆற்றல்கள் நிறைந்தபோதும், எப்போதும் அமைதியானவர் முரசொலி செல்வம். இப்போதும் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறார்.

முரசொலியில் தனது எழுத்துக்களால்

# ஜனநாயகக் குரலாக ஒலித்தவர் முரசொலி செல்வம்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் – பேராசிரியர் காதர்மொய்தீன் இரங்கல்!

*சென்னை, அக். 12*

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய செயலாளர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மருமகனும், முதல்வர் மு.க. ஸ்டாலின் தங்கை செல்வி கணவருமான முரசொலி செல்வம் அவர்கள் உடல் நலம் குறைவால் பெங்களூர் மருத்துவமனையில் நேற்று காலமானார். இவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.



இவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது :

முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மருமகனும், முதல்வர் மு. க. ஸ்டாலின் தங்கை செல்வி கணவருமான முரசொலி செல்வம் அவர்கள் உடல் நலம் குறைவால் பெங்களூர் மருத்துவமனையில் நேற்று காலமானார் என்ற செய்தியை கேட்டு மிகவும் துக்கமும் துயரமும் அடைந்தேன்.

முரசொலி செல்வம் மெல்லியக் குரலில் பேசி எல்லோரிடமும் அன்பாக பழகக்கூடியவர் அவரது மறைவு செய்தி என் மனதை உலுக்கியது. அவருடைய முரசொலி நாளிதழில் திறம்பட ஆசிரியராக பணியாற்றி வந்தார். ஆசிரியராக பொறுப்பேற்று தன் எழுத்துக்களால் ஜனநாயக குரலாக ஒலித்தவர் அவரது கட்டுரைகள் நான் தொடர்ந்து படித்து வருவதுண்டு. முரசொலி நாளிதழை தொடர்ந்து திறம்பட கடைசி காலம் வரை பணியாற்றி வந்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அவரின் மறைவு தமிழக மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. அவரை இழந்து வாடும் அவரது மனைவி செல்வி குடும்பத்தினருக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் குடும்பத்திற்கும் மற்றும் முரசொலி நாளிதழில் பணிபுரியும் அனைத்து நிர்வாகிகளுக்கு மணிச்சுடர் நாளிதழ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன் இரங்கல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.